கூட்டம் எண்.7/2022 நாள்.21.10.2022

# சாதாரணக் கூட்டம்

குன்றத்தூர் நகராட்சியின் **அக்டோபர்**-2022 மாதத்திற்கான சாதாரணகூட்டம் 21.10.2022ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் நகரமன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்.1**

குன்றத்தூர் நகராட்சி ஆணையரின் செப்டம்பர்-2022 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.185 நாள்.21.10.2022**

**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

குன்றத்தூர் நகராட்சியின் செப்டம்பர்-2022 மாதத்திய பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகள் பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கு.

| மாதம் | பிறப்பு | இறப்பு | இறந்து பிறந்தவைகள் |
|---|---|---|---|
| செப்டம்பர்-2022 | - | 22 | - |

**தீர்மானம் எண்.186 நாள்.21.10.2022**

**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண்.3**

குன்றத்தூர் நகராட்சியின் வரி மற்றும் வரியில்லா இனங்களின் செப்டம்பர்-2022ம் மாத கேட்பு, வசூல், நிலுவைப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு.

| | கேட்பு ரூ லட்சத்தில் | வசூல் ரூ.லட்சத்தில் | நிலுவை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| வரியினம் | 194.85 | 50.25 | 144.6 |
| வரியில்லா இனம் | 13.55 | 1.59 | 11.96 |
| குடிநீர் கட்டணம் | 51.36 | 10.23 | 41.13 |

**தீர்மானம் எண்.187 நாள்.21.10.2022**

**பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண்.4**

குன்றத்தூர் நகராட்சியின் செப்டம்பர்-2022ம் மாத செலவுசீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

செப்டம்பர் -2022 - செ.சீ.எண்.227 முதல் 287 வரை

**தீர்மானம் எண்.188 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.5**

குன்றத்தூர் நகராட்சியில் டெங்கு காய்ச்சல் மற்றும் பிற தொற்றுநோய் பரவுவதை தடுக்க பல்வேறு முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள 01.04.2022 முதல் 30.09.2022 முடிய 6 மாதங்களுக்கு 40 எண்ணிக்கையிலான மஸ்தூர் பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியரின் சந்தை விலைப்படி ஊதியம் வழங்கவும், இச்செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.27 நாள்.11.04.2022ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மேற்காணும் விவரப்படி 30.09.2022 உடன் பணிக்காலம் முடிவடைவதால் துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை, காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.250/இ5/2022 நாள்.01.09.2022ன் வழிகாட்டு நெறிமுறைகளின்படி 72 தற்காலிக DBC பணியாளர்களை அமர்த்தி டெங்கு காய்ச்சல் நோய்த்தடுப்பு பணியை தீவிரப்படுத்த தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து இப்பணியை தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.162 நாள்.30.09.2022ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் தீர்மானத்தின்படி இந்நகராட்சியில் ஏற்கனவே பொதுசுகாதார பணிகள் மேற்கொண்டு வரும் KRS Service நிறுவனத்தின் மூலம் 01.10.2022 முதல் 31.12.2022 வரை மாவட்ட ஆட்சியரின் செயல்முறையில் தெரிவித்துள்ள ஊதிய விகிதத்தின்படி மேற்கொள்ளவும், மேற்படி பணியினை செய்தமைக்கு நகரமன்றத்தின் முன்அனுமதியும் மற்றும் தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி பணி மேற்கொண்டமைக்கு முன்அனுமதி மற்றும் பட்டியல் தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மானம் எண்.189 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.6</u>**

குன்றத்தூர் நகராட்சியில் Airport Authority-ன் சுற்றுச்சூழல் குழு மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்ட வளாகம் ஆய்வு செய்யப்பட்டதில் திறந்தவெளி குப்பை கிடங்கில் குப்பைகள் கொட்டப்படுவதால், அது பறவைகளை ஈர்ப்பதின் காரணமாக விமான விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், எனவே சென்னை விமான நிலையத்தை சுற்றி 10 கி.மீ. சுற்றளவில் திறந்தவெளி குப்பை கிடங்குகள் செயல்படுத்த கூடாது என நேரில் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து அவசர அவசியத்தினை முன்னிட்டு திடக்கழிவு மேலாண்மை திட்ட குப்பை கொட்டுமிடத்தில் திறந்தவெளியில் உள்ள குப்பைகளை அகற்றுவதற்கு இவ்வலுவலக விலைப்புள்ளி அறிக்கை ந.க.எண்.65/2022/அ1 நாள்.08.07.2022ன்படி 15.07.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திரு.N.ஹேமபூசனம் என்பவருக்கு பொதுசுகாதார அவசர அவசியத்தினை முன்னிட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டு குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.144 நாள்.30.08.2022ன்படி பட்டியல் தொகை வழங்க மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்காணும் பணி முடித்தமைக்கு ஒப்பந்ததாரர் திரு.N.ஹேமபூசனம் என்பவருக்கு தற்போது 3வது பகுதித் தொகையாக ரூ.908500/-ஐ வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.190 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.7**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதார பணிக்கு பயன்படுத்தப்படும் காம்பேக்டர் வாகனம் எண்.TN 85 4073-ஐ (2013-2014ம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டது) பழுதுநீக்கம் செய்ய ரூ.300000/-க்கு தோராய செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 01.10.2022 முதல் காம்பேக்டர் வாகனம் தகுதிச்சான்று பெற்று பணி மேற்கொள்ளும்வரை தனியார் வாகனம் மூலம் குப்பைகளை அகற்ற விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ.எண். | விவரம் | Rate Quoted By R.ஹரிஷ்குமார், திருவள்ளூர். | Rate Quoted By KRS Service Chennai - 50 | Rate Quoted By தி வாலாஜா அக்ரோ இஞ்சினியரிங் |
|---|---|---|---|---|
| | | தொகை ரூ. (நாள் 1க்கு) | தொகை ரூ. (நாள் 1க்கு) | தொகை ரூ. (நாள் 1க்கு) |
| 1 | காம்பேக்டர் வாகனம் தகுதிச்சான்று பெறும் வரை தனியார் வாகனம் மூலம் குப்பைகள் அகற்றுதல் | ரூ.5000/- (ஓட்டுநர் கூலி மற்றும் டீசல் உட்பட) | ரூ.5800/- (ஓட்டுநர் கூலி மற்றும் டீசல் உட்பட) | ரூ.6300/- (ஓட்டுநர் கூலி மற்றும் டீசல் உட்பட) |

**தீர்மானம் எண்.191 நாள்.21.10.2022**

**குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.8</u>**

குன்றத்தூர் நகராட்சி பகுதியில் வார்டு எண்.1, 12, 3, 5 மற்றும் 6வது வார்டுகளில் போதிய வாகனங்கள் இல்லாததால் குப்பைகள் சேகரிப்பதில் தேக்கம் ஏற்படும் சூழல் நிலவுவதால் குப்பைகளை தரம் பிரித்து அன்றாடம் திடக்கழிவு மேலாண்மை பணியை தொடரவும் வாகனங்கள் குறைவாக உள்ளதாலும் அவசர அவசியம் கருதி 3 எண்ணிக்கை Tata Ace வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி திடக்கழிவுகளை சேகரிக்க குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.163 நாள்.30.09.2022ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிக்கு விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியை அங்கீகரிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ.எண். | விவரம் | Rate Quoted By R.ஹரிஷ்குமார், திருவள்ளூர். | Rate Quoted By KRS Service Chennai - 50 | Rate Quoted By தி வாலாஜா அக்ரோ இஞ்சினியரிங் |
|---|---|---|---|---|
| | | தொகை ரூ. ( நாள் 1க்கு) | தொகை ரூ. ( நாள் 1க்கு) | தொகை ரூ. ( நாள் 1க்கு) |
| 1 | திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் மேற்கொள்ள மூன்று இலகுரக வாகனங்கள் வாடகைக்கு அமர்த்துதல் | ரூ.1900/- (ஓட்டுநர் கூலி மற்றும் டீசல் உட்பட) | ரூ.2050/- (ஓட்டுநர் கூலி மற்றும் டீசல் உட்பட) | ரூ.2200/- (ஓட்டுநர் கூலி மற்றும் டீசல் உட்பட) |

**தீர்மானம் எண்.192 நாள்.21.10.2022**

**குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.9</u>**

குன்றத்தூர் நகராட்சியில் பசுமையை அதிகரிக்கவும் மற்றும் பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்தவும் நகராட்சி எல்லைக்குட்பட்ட மணஞ்சேரி சுடுகாடு பகுதியில் பறவைகள் மற்றும் விலங்குகள் நல அறக்கட்டளை நிறுவனத்தின் மூலம் மரக்கன்றுகள் நட்டு வளர்க்கவும், இச்செலவினத்தை சமூக பங்களிப்பு தொகையிலிருந்து பெறப்படும் நிதியின் கீழ் (Company Social Responsibility Fund) செயல்படுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.193 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.10**

குன்றத்தூர் நகராட்சியில் E-Governance பணிகள் UTIS Software மூலம் மேற்கொள்ள தேவையான கணிணி, அச்சுபொறி மற்றும் நகலெடுக்கும் இயந்திரம் கீழ்க்காணும் விவரப்படி பயன்பாட்டில் உள்ளது.

| | | |
|---|---|---|
| அலுவலக பயன்பாட்டிற்கான கணிணி (Computer & Monitor with standard Accfessories | - | 12 எண்ணிக்கை |
| மடிக்கணிணி (Laptop) | - | 2 எண்ணிக்கை |
| அச்சுப்பொறி (Printer) | - | 12 எண்ணிக்கை |
| வண்ண அச்சுப்பொறி (Colour Printer) | - | 2 எண்ணிக்கை |
| நகலெடுக்கும் இயந்திரம் (Xerox Machine) | - | 1 எண்ணிக்கை |
| 10 KVA Online UPS with 10 Hrs Backup | - | 1 எண்ணிக்கை |

தற்போது மேற்படி உபகரணங்களுக்கு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், இதற்கான தோராய செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.194 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.11</u>**

குன்றத்தூர் நகராட்சியில் நகராட்சி நிர்வாகத்திற்கேற்ப அனைத்து பிரிவு தலைமை அலுவலர்கள், பிரிவு உதவியாளர்கள் மற்றும் வசூல் மையம் ஆகிய பிரிவுகளின் அன்றாட நிர்வாக பணிகள் ஒருங்கிணைந்த மென்பொருள் மூலம் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், திட்ட அறிக்கைகள் தயாரித்து அனுப்பி வைப்பதற்கான கணிணி மற்றும் அச்சுப்பொறி ஆகியன அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. இவற்றை Intra Net மூலம் இணைத்து அவைகளுக்கு Internet இணைப்பு வழங்கி, அன்றாட UTIS பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள Local Area Network (LAN) அமைப்பு தேவைப்படுகிறது. எனவே Intra Net அமைப்பை நகராட்சி அலுவலகத்தில் ஏற்படுத்தவும், இதற்கு தோராய செலவினம் மேற்கொள்ளவும் தீர்மானம் எண்.9 நாள்.27.12.2021ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது எனவே மேற்காணும் விவரப்படி நகராட்சி அலுவலகத்தில் Local Area Network (LAN) பணிகள் மேற்கொண்டமைக்கு செலவினம் ரூ.4.75 இலட்சம் பொதுநிதியில் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.195 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.12**

குன்றத்தூர் பேரூராட்சியானது அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021ன்படி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து ஆணையர் மற்றும் நகரமன்ற தலைவர் பயன்பாட்டிற்கு முறையே பொலிரோ வாகனம் மற்றும் ஸ்கார்பியோ வாகனம் கொள்முதல் செய்யப்பட்டது.

மேற்படி வாகனங்கள் 06.06.2022 அன்று தற்காலிகமாக பதிவு செய்யப்பட்டு 06.06.2022 முதல் 05.07.2022 வரை தற்காலிக உரிமம் வழங்கப்பட்ட நிலையில் 01.08.2022 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் நடத்தப்பட்ட விழாவில் மேற்படி வாகனங்கள் குன்றத்தூர் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேலும் மேற்காணும் வாகனங்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நிரந்தர பதிவு செய்யக் கோரப்பட்டதில் பதிவு செய்வதற்கு காலதாமதமானதால் கூடுதல் கட்டணம் செலுத்தக் கோரி வட்டார போக்குவரத்து அலுவலர், குன்றத்தூர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ள கேட்பு தொகையினை செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ.எண். | வாகன விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Mahindra Bolero B6 (O) BS-VI (TN 85 R 9451) | 12326 |
| 2. | Mahindra SCORPIO S11 2.2mHawk-140MH-2WD 7S (TN 85 R 0222) | 22482 |
| | மொத்தம் | **34808** |

**தீர்மானம் எண்.196 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.13</u>**

குன்றத்தூர் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கன்னியப்பன் நகர், ஜெகநாதபுரம், சம்மந்தம் நகர், மேத்தா நகர், நத்தம், கரைமாநகர், ஒண்டிக்காலனி, சேக்கிழார் நகர் பகுதிகள் வழியாக செல்லும் பொதுப்பணித்துறை கால்வாயில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து உபரிநீர் திறந்துவிடும் சமயங்களில் கால்வாய்களில் வெள்ளநீர் வெளியேறாமல் குடியிருப்பு பகுதிகளில் புகுந்து தேக்கமடைகிறது. இதனால் அப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். எனவே பொதுமக்கள் நலன்கருதி மேற்படி பகுதிகளில் 3 கிலோ மீட்டர் நீளத்திற்கு உள்ள பொதுப்பணித்துறை கால்வாயினை பொக்லைன் இயந்திரம் மூலம் தூர்வாரி சுத்தம் செய்யவும், இதற்கான தோராய செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.197 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.14</u>**

அரசாணை (நிலை) எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.09.2021.ன்படி உள்ளாட்சி அமைப்புகளில் நீர்நிலைகள் புனரமைத்தல், பூங்காக்கள் அமைத்தல், பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்துதல், மரம் நடுதல், பள்ளிக்கூடங்கள் மேம்படுத்துதல், பொதுசுகாதாரம் மையம், கற்றல் மையங்கள், சாலைகள் மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ள தமிழக அரசால் நமக்கு நாமே திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி குன்றத்தூர் நகராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் பி.கே.வி மகா நகர் குடியிருப்போர் நலச்சங்கத்தின் நிதியுதவி மற்றும் திட்ட நிதியுடன் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்காணும் விவரப்படி தார்சாலை பணி மேற்கொள்ள உரிய கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பி.கே.வி மகா நகரில் தார்சாலை அமைத்தல் | 1,50,00,000/- |

**தீர்மானம் எண்.198 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.15</u>**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் ஆ கிராமம், நில அளவை எண்கள்.67/3 & 67/6B-ல் அடங்கிய 3190 ச.மீ (78.82 சென்ட்) பரப்பளவில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திருமதி.மெட்டில்டா, திரு.S.சீனிவாசன் GPA திரு.T.தனசேகரன், எண்.32, பல்லாவரம் மெயின் ரோடு, குன்றத்தூர், சென்னை – 600069 என்பவரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும கடிதம் எண்.L1/9927/2020 நாள்.16.03.2022ன்படி மாதிரி வரைபடம் அங்கீகரிக்கப்பட்டு மேற்படி மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 763 சதுர மீட்டர், பொதுபயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 22 சதுர மீட்டர் மற்றும் பொதுபயன்பாட்டிற்காக ( Reserved for Tangedco) ஒதுக்கப்பட்ட 21 சதுர மீட்டர் இடத்தினை குன்றத்தூர் சார்பதிவக பத்திரப்பதிவு எண்.8267/2022 நாள்.26.04.2022ன்படி தானப்பத்திரம் மூலம் பதிவு செய்து இந்நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் அவர்களின் கடிதம் எண்.L1/9927/2020 நாள்.30.05.2022ல் மேற்படி நில அளவை எண்ணில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க (19 எண்ணிக்கை) திட்ட அனுமதி எண்.PPD/LO.No.66/2022 நாள்.30.05.2022ன்படி ஒப்புதல் அளித்து வரப்பெற்றுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிப்பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதை தொடர்ந்து அடிப்படை வசதி பணிகள் மனுதாரரால் செய்யப்பட்டுள்ளதாக கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு நகராட்சியின் இறுதி அங்கீகாரம் வழங்குவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.199 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.16</u>

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட மணஞ்சேரி கிராமம், நில அளவை எண்.5/1A2 & 1A3-ல் அடங்கிய சுமார் 3200 ச.மீ (79.01 செண்ட்) பரப்பளவில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு.காசி நாடார் Co-owner cum power agent on behalf of திரு.K.ரத்தினவேல் ராஜ், எண்.30A, F1, காசி மணி பிளாட்ஸ், மல்லிகை அவென்யூ, அன்னம்மாள் நகர், விருகம்பாக்கம், சென்னை – 600092 என்பவரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும கடிதம் எண்.Layout-1/0152/2021 நாள்.23.03.2022ன்படி மாதிரி வரைபடம் அங்கீகரிக்கப்பட்டு மேற்படி மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 1221 சதுர மீட்டர், நகராட்சி பொதுபயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 16 சதுர மீட்டர் மற்றும் பொதுபயன்பாட்டிற்காக ( Reserved for Tangedco) ஒதுக்கப்பட்ட 16 சதுர மீட்டர் இடத்தினை குன்றத்தூர் சார்பதிவக பத்திரப்பதிவு எண்.7618/2022 நாள்.18.04.2022ன்படி தானப்பத்திரம் மூலம் பதிவு செய்து இந்நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் அவர்களின் கடிதம் எண். Layout-1/0152/2021 நாள்.28.04.2022ல் மேற்படி நில அளவை எண்ணில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க (15 எண்ணிக்கை) திட்ட அனுமதி எண். PPD/LO.No.49/2022 நாள்.28.04.2022ன்படி ஒப்புதல் அளித்து வரப்பெற்றுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிப்பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதை தொடர்ந்து அடிப்படை வசதி பணிகள் மனுதாரரால் செய்யப்பட்டுள்ளதாக கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு நகராட்சியின் இறுதி அங்கீகாரம் வழங்குவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.200 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.17**

அரசாணை எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021-ன்படி குன்றத்தூர் பேரூராட்சியானது இரண்டாம்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்நகராட்சி 9 ச.கி.மீ பரப்பளவு கொண்ட நகராட்சியாகும். இந்நகராட்சியின் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 42126. தற்போது சுமார் 17946 குடியிருப்புகளும், 71784 மக்கள் தொகையும் உள்ளது.

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குழல்விளக்குகள், சி.எப்.எல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் உயர்கோபுர மின்விளக்குகள் ஆகிய 2898 தெருமின் விளக்குகள் உள்ளன. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரைகளின்படி, மேற்காணும் தெருமின் விளக்குகளுக்கு செலுத்தப்படும் மின்கட்டணத்தினை குறைக்கும் பொருட்டு அவற்றை அடர்மின் விளக்குகளாக மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 1009 குழல் விளக்குகள், 1314 CFL விளக்குகள், 553 சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் 22 உயர்கோபுர மின்விளக்குகளை புதிய அடர்மின் விளக்குகளாக மாற்றம் செய்ய ரூ.324.06 லட்சம் மதிப்பீட்டிலான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு 2022-2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள கருத்துரு தயார் செய்து மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி கோரி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

பணியின் விவரம்

| Existing Categories of Lights Wattage | Proposed LED Wattage | No.of Lights | Est. Amount (Rs. In lakhs) |
|---|---|---|---|
| FTL 40W | LED 40 W | 1193 | 75.40 |
| CFL – 36 W | LED 60 W | 966 | 69.83 |
| SVL – 250 W | LED 70 W | 446 | 34.65 |
| SVL – 250 W | LED 90 W | 293 | 39.83 |
| Street light Controller (Single phase) | - | 74 | 28.86 |
| Street light Controller (Three phase) | - | 4 | 1.96 |
| ILM device | - | 293 | 10.47 |
| CCMS | - | 371 | 6.65 |
| Base cost | | | 267.65 |
| GST 18% | | | 48.18 |
| LWF 1% | | | 2.68 |
| Contingencies | | | 5.55 |
| **Total** | | **2898** | **324.06** |

**தீர்மானம் எண்.201 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.18**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதி பணிகள் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள அவசர அவசியத்தினை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1. | பேருந்து நிலையம் எதிரில் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் தற்காலிக கொட்டகை (Temporary Shed) அமைத்தல் | 600000 |
| 2 | கால்வாய்கரை தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 980000 |
| 3 | முருகன் கோயில் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 995000 |
| 4 | தேவி நகர் 3வது குறுக்கு தெருவில் கால்வாய் அமைத்தல் | 980000 |
| 5 | நல்லீஸ்வரர் நகரில் தார்சாலை அமைத்தல் | 520000 |
| 6 | மோகலிங்கம் நகரில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 800000 |
| 7 | திடக்கழிவு மேலாண்மை திட்ட வளாகத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 600000 |
| 8 | கொல்லைத்தெரு குறுக்கு தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 980000 |
| 9 | மணஞ்சேரி பல்லாவரம் மெயின் ரோடு சிறுபாலம் அமைத்தல் | 200000 |
| 10 | நத்தம் பெருமாள் கோயில் தெரு, அம்மன் கோயில் தெருவில் சாலை Batch Work செய்தல் | 200000 |

**தீர்மானம் எண்.202 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.19**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட மனைப்பிரிவுகளில் பூங்காக்களுக்கு என ஒதுக்கப்பட்ட திறந்தவெளி இடங்களை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும திறந்தவெளி கட்டண நிதியில் இருந்து சுற்றுச்சுவர் அமைத்து பராமரிக்க நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.203 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.20**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 30 வார்டு பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறாக சாலைகள் மற்றும் தெருக்களில் சுற்றித் திரியும் மாடுகள், பன்றிகள் மற்றும் நாய்கள் ஆகியவற்றினை பிடிப்பது மற்றும் பொதுமக்கள் டெங்கு காய்ச்சல் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து ஆடியோ அறிவிப்பு செய்வதற்கும், நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும் ரூ.5.00 இலட்சம் தோராய செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.204 நாள்.21.10.2022**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**